# திரையிசைப் பாடல்களின் தாக்கத்தால் மரபிழந்து வரும் இசைநாடகக் கலை

த.றொபேட் அருட்சேகரன்,
இசைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்
trarudsegaran@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இயல், இசை, நாடகம் என மூன்று கலைகளும் சேர்ந் ததே முத்தமிழ் ஆகும். இம் மூன்று கலைகளும் ஓரிடத்தில் பயன்படுத்தப்படும் முக்கனிச் சாறு போன்ற கலையே இசைநாடகக் கலையாகும். இசைநாடகக் கலையானது பலரால் வளர்க்கப்பட்ட கலை எனினும் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் முயற்சியாலேயே உலகப் புகழ் பெற்ற கலையாக ஏற்றம் கண் டது எனலாம். செந்நெறித் தமிழ் இசையிலும் செவ்வியல் தமிழிலும் நாடகக் கலையிலும் உயரிய திறன் கொண்டவராக விளங் கிய தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் இசைநாடகக் கலை யை செந்நெறிக் கலையாக உருவாக்கி ஆற்றுகைப்படுத்தி யதுடன் நாடகக் குழுக்களை உருவாக்கி எண்ணற்ற இளம் கலைஞர்களையும் உருவாக்கினார். இதனால் இசை நாடகக் கலையானது தமிழர்கள் வாழும் அனைத்து இடங்களிலும் மேடையேற்றப்பட்டது. ஆலயத் திரு விழாக்களிலும் நேர்த்திக் கடன் கழிக்கும் ஆலய நிகழ்வு களிலும் கலை விழாக்களிலும் இசைநாடகக் கலையானது முக்கிய இடம் பெற்றது. தமிழகத்தில் பெரும் புகழ் பெற்றி ருந்த சங்கரதாஸ் சுவாமிகளின் இசை நாடகங்கள் ஈழத் திற்கும் பரவலாக்கம் பெற்று ஈழத்துக் கலைஞர்களாலும் ஆற்றுகை செய்யப்பட்டு தற்காலம் வரை ஈழத் தமிழர்களின் முக்கியமான பண்பாட்டுக் கலை வடிவமாக விளங்கி வருகின்றது. ஈழத்தின் கர்நாடக இசை வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய கலை இசைநாடகக் கலையாகும். கர்நாடக இசைக் கச்சேரிகள் ஈழத்தில் நடைபெறுவதற்கு முன்னைய காலங்களில் பொதுமக்களின் முக்கிய பொழுதுபோக்குக் கலையாகவும் முதன்மையான இர சனைக்குரிய கலையாகவும் இசைநாடகக் கலையே விளங்கியது. இசைநாடகக் கலையானது கற்பிக்கப்படும் கலை வடிவமாக இல்லாத காரணத்தால் தற்காலத்தில் நலிவடைந்தும் மரபிழந்தும் காணப்படுகின்றமைக்கான காரணங்களைக் கண்டறிதலும் அதற்கான தீர்வுகளை முன்மொழிவதுமே இந்த ஆய்வின் பணியாகும். திரையிசைப் பாடல்களை இசைநாடக மேடைகளில் பாடுவோர் தற்காலத்தில் அதிகரித்து வருகின்றனர். பொது மக்கள் திரையிசைப் பாடல்களில் அதிக நாட்டமுடை யோராக இருப்பதால் நாடகங்களில் அப்பாடல்களைப் பயன்படுத்துவதன் மூலம் நாடகக் கலையை செல்வாக்குப் பெறச் செய்யலாம் என்று சில நடிகர்கள் தவறாகச் சிந்திப் பதையும் அவ்வாறே செயற்படுவதையும் தற்காலத்தில் காணக்கூடியதாக உள்ளது. ஆய்வாளர் இசைநாடகக் கலைஞர் என்பதால் நேரடி யாகக் கண்ட அனுபவத்தின் ஊடான தரவுகளும் இசை நாடகக் கலைஞர்களுடன் நிகழ்த்திய உரையாடல்கள் மூலம் பெறப்பட்ட தரவுக ளும் இந்த ஆய்வை நகர்த்த உதவியிருக்கின்றன. இசை நாடகப் பிரதிகளில் எந்தவிதமான மாற்றங்களையும் மேற் கொள்ளாமல் அப்படியே பின்பற்றுவதன் மூலம் திரை யிசைப் பாடல்களைத் தவிர்த்து மரபுவழி தவறாத இசை நாடக ஆற்றுகைகளை உருவாக்க முடியும் என்பதே இந்த ஆய்வின் முடிவாகும்.

**திறவுச் சொற்கள்** – இசைநாடகம், திரையிசைப் பாடல்கள், மரபுவழி, இசைநாடக அரங்கு

## 1. ஆய்வு அறிமுகம்

தமிழர்களின் செந்நெறிக் கலையான இசைநாடகக் கலையானது ஹார்மோனியம், மிருதங்கம் போன்ற இசைக் கருவிகளுடன் மிக மிக அழகாக வேடமிட்டுத் தெள்ளுத் தமிழில் பாடல்களைப் பாடி வண்ணமுறு திரை கள் மேடையில் தொங்கவும் மின் ஒளி விளக்குகள் கண் களைக் கவரவும் ஆற்றுகை செய்யப்படும் பழைமை வாய்ந்ததும் தூய்மையானதுமான கலைவடிவமாகும்.

முற்காலத்தில் தமிழிசை வளர்த்த அரங்காகவும் இசை நாடகக் கலையானது விளங்கி வந்துள்ளது. ஆனால் தற்காலத்தில் தமிழகத்திலும் ஈழத்திலும் இசை நாடகக்

கலையானது தென்னிந்தியத் திரையிசைப் பாடல்களின் பயன்பாட்டால் மரபிழந்து வருகின்றமையைக் காணக் கூடியதாக உள்ளது.

திரையிசைப்பாடல்களைப்பயன்படுத்தும்நடிகர்கள்யார்? எதற்காகப் பயன்படுத்துகின்றனர்?, முதுகலைஞர்களால் இவை ஏற்றுக் கொள்ளப்படுகின்றனவா? இந்நிலையை எவ்வாறு கட்டுப்படுத்தலாம்? இசைநாடகக் கலையை எவ் வாறு புத்துயிர் பெறச் செய்யலாம்? போன்ற வினாக்களைத் தொடுப்பதன் ஊடாக இந்த ஆய்வானது முன்னெடுக்கப் படுகின்றது.

## 2. ஆய்வுப் பிரச்சினை

தற்காலத்தின் இசைநாடக நடிகர்கள் திரையிசைப் பாடல்கள் எவை?, நாடகப் பாடல்கள் எவை? என்னும் தெளிவின்மையோடு இருக்கின்றனர். இசைநாடகப் பாடல்கள் பல திரையிசையில் பயன்படுத்தப்பட்டதால் இவ்வாறான சிக்கல்கள் இசைநாடகத் துறையில் ஏற்பட் டுள்ளது எனலாம். எடுத்துக்காட்டாக ‘‘ஏனோ எனை எழுப்பலானாய் மட மானே’’ என்னும் பாடல் நவராத்திரி என்னும் திரைப்படத்தில் இடம்பெற்றிருக்கும் சங்கரதாஸ் சுவாமிகளின் சத்தியவான் சாவித்திரி என்னும் இசை நாடகத்தின் பாடல் ஆகும்.

இசைநாடகக் கலைஞர்கள் திரையிசைப் பாடல்கள் எவை? இசைநாடகப் பாடல்கள் எவை? என்னும் தெளிவின் மையோடு இருக்கின்றமை இந்த ஆய்வின் பிரச்சினை ஆகும்.

## 3. ஆய்வின் நோக்கம்

இசைநாடகப் பாடல்களை முழுமையாகக் கண்டறி வதும் அவற்றின் வர்ண மெட்டுக்களை அறிந்து கொள் ளுவதும் திரையிசைப் பாடல்களிற்கும் இசை நாடகப் பாடல்களிற்கும் இடையிலான வேறுபாடுகளை இராகப் பயன்பாட்டின் அடிப்படையின் வேறுபடுத்திக் கொள்ளுவதும் இந்த ஆய்வின் நோக்கமாக அமைகின்றது. திரையிசைப் பாடல்களின் பயன்பாட்டினை அடியோடு இல்லாது செய்வ தும் இந்த ஆய்வின் நோக்கமாகும்.

### ஆய்வின் கருதுகோள்

திரையிசைப் பாடல்கள் இசைநாடக அரங்குகளில் பயன்படுத்தப்படுவதால் இசைநாடகக் கலையானது அழிவின் பாதையில் செல்கின்றது என்பதே இந்த ஆய்வின் கருதுகோள் ஆகும்.

## 4. ஆய்வு முறையியல்

களஆய்வு, ஒப்பீட்டாய்வு போன்ற ஆய்வு முறைமைகள் இந்த ஆய்வில் பயன்படுத்தப்படுகின்றன.

### ஆய்வின் மூலங்கள்

கலைஞர்களின் சந்திப்புக்கள், நாடகப் பிரதிகள், வெளி யிடப்பட்ட இசைநாடக ஒலி,ஒளிப் பதிவுகள் என்பன இந்த ஆய்வின் மூலங்கள் ஆகும்.

### ஆய்வின் எல்லை

பலவிதமான கலைகளிலும் திரையிசையின் தாக்கம் காணப்படுகின்றது எனினும் இசைநாடக அரங்குகளில் திரையிசையின் பயன்பாட்டினால் ஏற்பட்டிருக்கும் தாக்கம் பற்றியதாக மட்டுமே இந்த ஆய்வானது அமையும். அத்துடன் சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்களை மைய மாகக் கொண்டதாகவும் இந்த ஆய்வு அமையும்.

### விவரிப்பு

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் பெரு வளர்ச்சி கண்ட இசைநாடகக் கலையானது அக்காலத் திலேயே ஈழத்திலும் மிக வேகமாக வளர்ச்சி கண்டது.

காங்கேசன்துறைத் துறைமுகத்திற்கும் வடமராட்சிப் பகுதிக்கும் தென்னிந்திய இசைநாடகக் கலைஞர்கள் கடல் வழியாக வந்து பல மாதங்கள் யாழ்ப்பாணத்திலேயே தங்கியிருந்து இசைநாடகங்களை மேடையேற்றினர்.

இலங்கை, இந்தியா போன்ற நாடுகள் சுதந்திரமடைந்த பின்னர் இரு நாடுகளிற்குமான போக்குவரத்தில் இருந்த தளர்வுநிலை முற்றிலுமாக மாறுபட்டுப் போனது கடவுச் சீட்டு, நுழைவுச் சீட்டு இல்லாமல் தென்னிந்தியக் கலை ஞர்கள் இலங்கைக்குள் வரமுடியாத நிலை தோன்றிய போது இசைநாடகக் கலையானது முழுமையாக ஈழத்துக் கலைஞர்களால் நிகழ்த்தப்பட்டது.

இதன் காரணத்தால் ஈழத்தில் எண்ணற்ற இசை நாடகக் குழுக்கள் தோற்றமடைந்ததுடன் பொதுமக்களின் இரசனைக்கும் விருந்தாக அவை அமைந்தன. ஈழத்தின் இசைநாடகக் கலைஞர்களுள் நடிகமணி. வி.வி.வைர முத்து என்பவர் இசைநாடகக் கலையின் உச்சத்தை அடைந்து வரலாறு படைத்தார். திரைப்படப் பாடல்களை இசைநாடக அரங்குகளில் பயன்படுத்தாத நடிகராக இவர் விளங்கினார்[1].

இவரது காலத்தில் இவருடன் இணைந்து நடித்த எந்த வொரு நடிகரும் இசைநாடக அரங்குகளில் தென்னிந்தியத் திரைப்படப் பாடல்களைப் பயன்படுத்தியதில்லை. ஆனால் அந்தக் காலத்தில் வேறு இசைநாடகக் குழுவினர் தமது ஆற்றுகைகளில் எல்லாவிதமான பாடல்களையும் பயன் படுத்தி வந்தனர்.

திறமை வாய்ந்த இசை நாடகக் கலைஞர்கள் திரைப் படப் பாடல்களைப் பாடுவதைத் தவிர்த்து வந்தனர். பொது மக்களின் இரசனைக்கு விருந்தாகத் திரைப்படப் பாடல்கள் இருக்கின்றன என்று கருதிய சில நடிகர்களால் தொடக்கி வைக்கப்பட்ட திரைப்படப் பாடற் கலப்பானது இசைநாடக அரங்கை சீர்கெடுத்து விட்டது[2] என்று மூத்த கலைஞர்கள் தற்காலத்தில் கவலையுறுகின்றனர்.

## 5. இசைநாடக அரங்குகளில் பயன்படுத்தப்பட்டு வரும் திரைப்படப் பாடல்கள் சில

- சமரசம் உலாவும் இடமே
- உலகம் அறியாத புதுமை
- குங்குமப் பூவே
- பருவம் பார்த்து அருகில்
- மாசில்லா நிலவே
- திங்கள் உறங்கிய போதும்
- உள்ளத்தில் நல்ல உள்ளம்
- கலையே உன் விழி
- வான மீதில்

மேற்குறித்த பாடல்கள் ஓரளவு இசைநயம் கொண் டவை என்பதும், இராக வரன்முறைகளை அனுசரித்து வருகின்றன என்பதும் உண்மையே. எவ்வாறாயினும் அவை திரைப்படப் பாடல்களே.

இசை நாடகப் பாடல்களிற்கு நிகரான திரைப்படப் பாடல் கள் பாடப்பட்ட காலத்தில் இசைநாடக ஆற்றுகையானது ஓரளவு சிறப்பாக இருந்தது.

ஆனால் தற்காலத்தில் வருகின்ற தமிழ்த் திரைப்படப் பாடல்கள் எவையும் இராகங்களை அடிப்படையாகக் கொண்டவையாகவோ இனிமையான பாடல்களாகவோ இருப்பதில்லை. இளையோரால் குத்துப் பாடல் என அழை க்கப்படும் பாடல்களே தற்காலத்தில் அதிகமாக வெளிவரு கின்றன.

ஈழத்தின் இசைநாடக அரங்கை விடத் தமிழகத்தின் இசைநாடக அரங்கானது முற்றிலுமாக மாறிவிட்டது எனலாம். தற்காலத் தமிழ்த் திரைப்படங்களிற்கு நிகராக இசைநாடகங்களை முழுமையாக மாற்றியுள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது. புதிது புதிதாக வருகின்ற அனைத்துப் பாடல்களையும் தமிழக இசைநாடக அரங்கு களில் காணக்கூடியதாக உள்ளது.

கால ஓட்டத்தில் இசைநாடகக் கலையானது முழுமை யாக வடிவம் மாறித் தேய்வடைந்து போகும் நிலையானது திரைப்படப் பாடற் கலப்பினால் தோன்றியுள்ளமை கவலை க்குரியதாகும்.

செவ்விசை அரங்கிற்கு நிகரான பாடல்களைக் கொண்ட மைந்த தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் இசை நாடகங் களில் அருவருப்பை ஏற்படுத்தவல்ல பாடல்களை இசை நாடகக் கலைஞர்கள் பயன்படுத்துகின்றமையை இசை நாடகக் கலைஞர்கள் தவிர்க்க முயற்சிக்காது போனால் இசைநாடகக் கலையானது மரபிழந்து முற்றிலுமாக அழிந்து போய் விடும் என்பதே ஆய்வாளரின் கருத்தாகும்.

## 6. முடிவுரை

இசைநாடகக் கலையின் வரன்முறைகளை அறியா மல் இசைநாடகத் துறையில் தம்மை இணைத்துக் கொண் டோரால் திரையிசைப் பாடல்கள் இசைநாடக அரங்குகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றமையும் இதனால் இந்தத் துறையின் மரபுத் தன்மை. தூய்மை என்பவை சிதைந்து போயுள்ளன என்பதும் இந்த ஆய்வின் முடிவுகளாகும்.

இசைநாடகப் பாடல்களை முறையாகப் பாட முடியாத நிலை இருந்தாலும் தென்னிந்தியத் தமிழ்த் திரைப்படப் பாடல்களை இசைநாடக மேடைகளில் பாடுவதை முற்றிலு மாக நிறுத்தும் போது இசைநாடகக் கலையானது ஓரளவு புத்துயிர் பெறும் என நம்பலாம்.

அத்துடன் சங்கரதாஸ் சுவாமிகளின் இசைநாடகப் பாடல்களை இசைக் கல்வி முறையில் கற்பதன் ஊடாக இசைநாடக அரங்கை உயிர்பெறச் செய்யமுடியும் என்ப தும் இந்த ஆய்வின் முடிவாகும்.

## 7. பரிந்துரை

இசைநாடகக் கலைஞர்களிற்கான களப்பயிற்சிகள் துறைசார்ந்த வல்லுநர்களால் நிகழ்த்தப்பட்டு இசைநாடகப் பாடல்கள் இசையாளர்களால் கற்பிக்கப்பட்டு நீண்டகால ஒத்திகையின் பின் நாடகங்களை மேடையேற்ற வேண்டும்.

இசைநாடகப் பாடல்களின் பண்புகளையும் இராக, தாள, சுருதி, லய, சந்த நுட்பங்களையும் தற்கால இசை நாடக நடிகர்கள் தெரிந்துகொள்ளவும் அவற்றை ஆற்று கைப்படுத்தவும் முயற்சிக்க வேண்டும்.

அத்துடன் ஒவ்வொரு நடிகரும் சுயமாக வசனங்களைப் பேசுதல், தமக்கு விருப்பமான பாடல்களைப் பாடுதல் என்பன தவிர்க்கப்பட்டு நடிகா் புகழ்பெற வேண்டும் என்பதை விட நாடகம் புகழ்பெற வேண்டும் எனும் சிந்தனையோடு ஒவ்வொரு இசை நாடக நடிகரும் செயற்பட முயற்சிக்க வேண்டும்.

**உசாத்துணை நூல்கள்**

[1] பத்மநாபன் -சுப சங்கரதாஸ் சுவாமிகளின் சந்தங்கள் கிளாசிக் ஒவ்செற், புதுவை, 2002.

[2] "சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகப் பாடல்கள்" தஞ்சைப்பல்கலைக்கழகம், 1989.

[3] பத்மநாபன் சு - சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்களில் இசைக் கூறுகள் கிளாசிக் ஒவ்செற் புதுவை, 2000.

[4] குணசேகரன் கே.ஏ. - இசை நாடக மரபு ஐயனார் ஒவ்செற் புதுவை 2005.

[5] செ.சுந்தரம்பிள்ளை. செ - ஈழத்து இசை நாடக வரலாறு யாழ் இலக்கிய வட்டம் 1990.

[6] சுந்தரம்பிள்ளைசெ. - வி.வி வைரமுத்து வாழ் வும் அரங்கும் பாரதி ரதிப்பகம் யாழ்ப்பாணம், 1996.

[7] சொர்ணலிங்கம் க. - "ஈழத்தில் நாடகமும் நானும்" ஆசீர்வாதம் அச்சகம், 1968.